
பக்கங்கள்: 09 விலை: 20/=

# காலைக்கதிர்

Kalaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 23 வெள்ளிக்கிழமை 05.06.2020 கதிர் 80



## சந்திரகிரகணம் இன்று இரவு

கொழும்பு, ஜூன் 05

இவ் வருடத்திற்கான இரண்டா வது சந்திர கிரகணம் இன்று நிகழ வுள்ளது.

இலங்கை நேரப்படி இன்று இரவு 11.15 மணியளவில் இந்தச் சந்திர கிரகணம் ஆரம்பமாவதாகக் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சந்தன ஜயரட்ன தெரி வித்துள்ளார்.

2

## முல்லைத்தீவு வர்த்தகரை காணவில்லை!

முல்லைத்தீவு, ஜூன் 05

முல்லைத்தீவு மல்லாவிபொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாலிநகர், வவு னிக்குளத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரைக் காணவில்லை என்று அவரது மனைவியால் மல்லாவி பொலிஸ் நிலையத்தில் முறையிடப் பட்டுள்ளது.

2

# கோட்டாவின் சர்வாதிகாரத்துக்கு எதிராகக் கூட்டமைப்பு அறிக்கை



## சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்த்து விரைவில் வரும் என்கின்றார் சம்பந்தன்

கொழும்பு, ஜூன் 05

பாதுகாப்பு என்ற பெயரில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச இராணுவ ஆட்சியை யும், பௌத்த மயமாக்கலையும் பகிரங்க மாக அரங்கேற்றி வருகின்றார். இதற்கு எதிராக எமது வன்மையான கண்டனங் களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். ராஜ பக்ஷ அரசின் இந்தப் படுமோசமான செயல் களைக் கண்டித்து சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் காட்ட மான அறிக்கையை விரைவில் நாம் வெளி யிடவுள்ளோம்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரி வித்தார்.

பாதுகாப்பான நாடு, ஒழுக்கமான, நீதி யான, சட்டத்தை மதிக்கும் சமூகம் என்ப வற்றைக் கட்டியெழுப்புவதற்கான ஜனாதி பதி செயலணியை ஜனாதிபதி உருவாக்கி யுள்ளார்.

2

# இராணுவமயமாக்கல் மிகவும் தீவிரம் போர்க்குற்றவாளிகளுடன் செயலணி

## கோட்டாபயவின் நடவடிக்கைக்கு எதிராக சர்வதேச அமைப்பு வன்மையான கண்டனம்



வோஷிங்டன், ஜூன் 05

இலங்கையில் எதேச்சாதிகார ஆட்சிக்கு வலுவான பாதையமைத்துக் கொடுப்பதாக, இரண்டு ஜனாதிபதி செயலணிகள் இவ்வாரம் நிறு வப்பட்டுள்ளதை வோஷிங்டனைத் தளமாகக் கொண்டியங்கும் சர் வதேச அமைப்பான பேர்ள் அமைப்பு வன்மையாகக் கண்டித்துள்ளது.

2





## திகா - திலகர் மோதலா?

கொழும்பு, ஜூன் 05

தொழிலாளர் தேசிய முன்னணியின் தலைவரான முன்னாள் அமைச்சர் பழனி திகாம்பரத்துக்கும் அதன் பொதுச்செயலாளரான முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் எம். திலகராஜாவுக்கும் இடையில் கருத்து முரண் பாடு ஏற்பட்டுள்ளது எனவும், அதைப் போக்கு வதற்கு மேற்கொள்ளப்பட்ட சமரச முயற்சிகள் தோல்வி அடைந் திருக்கின்றன எனவும் இணையத்தளங்களில் செய்தி கள் உலாவருகின்றன.

இந்தநிலையில், தொழிலாளர் தேசிய முன்னணி யைப் பிளவுபடுத்துவதை இலக்காகக் கொண்டு காலத் துக்குக் காலம் கட்டுக்கதைகளாக செய்திகளை வெளி யிடுவதன் மூலம் ஒரு குழு இயங்கி வருவதை அவதா னிக்க முடிகின்றது. இணையத்தில் வருகின்றது என் பதற்காக அதில் வெளிவரும் அநாமதேய

2

## பொலிஸாரின் சூட்டில் காயமடைந்தவர் சாவு!

கொழும்பு, ஜூன் 05

மொனராகலை - இத்தேகட்டுவ பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த சந் தேக நபர் வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

இன்று மொனராகலை - இத்தேகட்டுவ பகுதியில் பொலி ஸாருக்கும் சந்தேக நபருக்கும் இடையில் துப்பாக்கிப் பிர யோகம் இடம்பெற்றது. இதில் சந்தேக நபர் பலத்த காயங்க ளுக்குள்ளானார்.

2

## மூன்று மாதங்களுக்காக வரவு - செலவு சுற்றறிக்கை

### வெளியிட்டது நிதியமைச்சு

கொழும்பு, ஜூன் 05

ஜூன் முதலாம் திகதி முதல் ஓகஸ்ட் 31ஆம் திகதி வரை யான மூன்று மாத காலத்துக்குக் கூட்டு நிதியத்தில் இருந்து அரச செலவுகளைச் செய்ய வேண்டிய விதத்தை குறிப்பிட்டு வரவு - செலவு சுற்றறிக்கை ஒன்றை நிதியமைச்சு வெளியிட் டுள்ளது.

நிதியமைச்சு இந்த சுற்றறிக்கையை அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகள் மற்றும் திணைக்களப் பிரதானிகளுக்கு அனுப்பியுள்ளது.

2

## கடற்படை பாதிப்பு மேலும் அதிகரிப்பு

### இதுவரை 844 பேருக்கு 'கொரோனா'

கொழும்பு, ஜூன் 05

இலங்கையில் கொரோனா வைரஸ் இதுவரை அடையாளம் காணப்பட்டவர் களில் கடற்படை மற்றும் அவர்களுடன் நெருக்கமான 881 பேர் அடங்குகின்றனர். இதில் 844 பேர் கடற்படையினராவார். அவர்களில் 443 பேர் இதுவரை

2

## 858 பேர் குணமடைவு; 928 பேர் சிகிச்சையில்

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 19 பேர் குண மடைந்துள்ளனர். இதன்படி தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண் ணிக்கை 858 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று தொற்றுடன் 48 பேர் அடையா ளம் காணப்பட்டிருந்தனர். இதுவரை

2

## இராணுவமயமாக்கல் மிகவும் தீவிரம் ...............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தேசிய பாதுகாப்பு என்ற பெயரிலும், உலகளாவிய கொள்ளை நோய்க்கான எதிர்வினைகளில் ஒன்றெனத் தெரிவித்தும் அரச நடவடிக்கைகளை இராணுவமயமாக்குவதற்கான ஜனாதிபதியின் முன்னெடுப்பின் ஒரு தீவிர விரிவாக்கமாக இப் புதிய ஜனாதிபதி செயலணிகள் அமைகின்றன.

இவ்விரு புதிய செயலணிகளும் சிங்களவர்களை மட்டுமே உறுப்பினர்களாகக் கொண்டுள்ளதாகத் தோன்றுவதோடு, அவர்களில் சிலர் போர்க்குற்றவாளிகள் எனச் சந்தேகிக்கப்படுபவர்கள் எனவும் தெரிகின்றது. இது மக்கள் திரள் மீது பெரும் அட்டூழியங்களை மேற்கொண்டவர் எனக் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆதரவோடு, இலங்கை தனது இனத்துவ ஆட்சியை வலுப்படுத்துவதையே சுட்டிக் காட்டுகின்றது.

கோட்டாபய ராஜபக்ஷவின் புதிய ஜனாதிபதி செயலணிகள், ஏலவேயுள்ள இராணுவமயமாக்கலையும், அரச அனுசரணையுடன் தமிழர் அதிகம் வாழும் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுவதையும் அதிகப்படுத்தி, பிராந்தியத்தில் மேலும் பதற்றத்தையும், உறுதியற்ற தன்மையையும் உருவாக்கும் என்று பேர்ள் அமைப்பின் நிர்வாக இயக்குநர் டா மனோரஞ்சன் தெரிவித்தார்.

இச்செயலணிகளை வழிநடத்த கோட்டாபய ராஜபக்ஷ போர்க்குற்றவாளிகளை நியமித்துள்ளமை, 2009 இல் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அட்டூழியங்களுக்கு வகைப்பொறுப்புக் கூற வேண்டும் என்ற சர்வதேச அழைப்புகளை அவர் முற்றிலும் புறக்கணிப்பதையே வலியுறுத்துகின்றது.

ஒழுக்கமான, நீதியான மற்றும் சட்டத்தை மதிக்கும் சமூகம் ஒன்றை உருவாக்குவதற்கான ஜனாதிபதி செயலணி ஆனது முற்றுமுழுதாக இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகளால் ஆனது. இதில் ஐ.நா. மற்றும் ஐக்கிய அமெரிக்காவினால் போர்க்குற்றங்களைப் புரிந்தவர்கள் என நம்பத்தகுந்த முறையிற் குற்றஞ்சாட்டப்பட்டவர்களும் உள்ளடங்குவர்.

சமூகக் குழுக்களின் சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுப்பது மற்றும் சமூக விரோத நடவடிக்கைகளுக்குப் பொறுப்பானவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பது என்பதாக இச்செயலணியின் குறிக்கோள்கள் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டுள்ளன.

இது இச்செயலணிக்குப் பரந்துபட்ட பொறுப்புகளை அளித்து, மனித உரிமை அமைப்புகள், தமிழ் குடிசார் சமூக அமைப்புகள் மற்றும் அரசியல் பங்கேற்பாளர்கள் மீதான கட்டுப்பாட்டை வலுப்படுத்தக்கூடும் என்ற அச்சத்தை மேலும் அதிகரிக்கின்றது.

பிற நாடுகளில் உள்ளோரின் மீது நடவடிக்கை எடுப்பதற்கான உரிமமும் இந்தச் செயலணிக்கு வழங்கப்பட்டுள்ளது. இது புலம்பெயர் தமிழர்கள் இலக்கு வைக்கப்படுவதையும், கண்காணிக்கப்படுவதையும் அதிகரிப்பதற்கான ஒப்புதலை வழங்குகின்றது.

கிழக்கு மாகாணத்தின் தொல்பொருட்பாரம்பரிய முகாமைத்துவத்துக்கான ஜனாதிபதி செயலணி, கிழக்கில் அரச நிதியைப் பயன்படுத்தி இராணுவம், அரச அதிகாரிகள் மற்றும் தொல்பொருள் திணைக்களம் ஆகியன அரங்கேற்றும் சிங்கள மயமாக்கலின் விரிவான பின்னணியில் வைத்தே பார்க்கப்பட வேண்டும்.

தற்போது இந்தச் சிங்கள மயமாக்கலானது, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாகக் காணப்படும் இம் மாகாணத்தில் பௌத்த விகாரைகளை நிர்மாணிப்பதன் மூலம் முன்னெடுக்கப்படுகின்றது. சிங்கள நியமனங்களை மட்டுமே கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இச்செயலணி, நிச்சயமாக இத்திட்டத்தின் ஓர் தொடர்ச்சியாக, தமிழ் அல்லது முஸ்லிம் வரலாற்றுத் தளங்களின் இழப்பில், சிங்கள - பௌத்த வரலாற்று இடங்களைக் கண்டறிந்து பாதுகாப்பதற்காகச் செயற்படும். இச்செயலணி, பௌத்த பிக்கு பணமுரே திலகவன்ச தேரோ உட்பட பல பௌத்த தீவிரப்போக்குடையோரை உறுப்பினர் களாகக் கொண்டுள்ளது. இப்பிக்கு திருகோணமலையிலுள்ள புல்மோட்டை மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களைச் சிங்களமயப்படுத்தும் முயற்சிக ளுக்காக அறியப்பட்டவர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இச்சமீபத்திய நடவடிக்கை, இலங்கையில் ஆளுகைக்கு உறுதுணையாக இருக்கும் சிங்கள - பௌத்த தேசியவாத நெறிமுறைகளை அழிப்பபடையாகக் கொண்டது. இலங்கையின் பெரும்பான்மை சமூகத்தை ஊடுருவி வரும் இனவாதத்துக்குத் தீர்வுகாணத் தவறுவது, குறிப்பாகத் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு மோசமான விளைவுகளை ஏற்படுத்தும்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் கோட்டாபய ராஜபக்ஷவின் சர்வாதிகார ஆட்சியை உறுதிப்படுத்துவதற்கான வாய்ப்பு அதிகம். இலங்கைக்குள் இருந்து வரக்கூடிய சீர்திருத்தங்கள் குறித்தான நம்பிக்கைகள் பயனற்றதாகவே இருப்பதால், சர்வதேசச் சமூகம் தீர்க்கமான நடவடிக்கை எடுப்பதுடன், இராணுவமயமாக்கம் அதிகரிக்கப்பட்டுக்கொண்டு வரும் இலங்கை அரசுக்கு ஆதரவளிப்பதை நிறுத்த வேண்டும். இல்லாவிடின், இலங்கையின் துயரமான கடந்த காலம் மீண்டும் வருவதைத் தவிர்க்க இயலாது - என்றுள்ளது.

# இந்தியாவிலிருந்து 2 பேரை அழைத்து வந்த 6 பேர் கைது

## படகும் பறிமுதல்

மன்னார், ஜூன் 05

இந்தியாவில் இருந்து சட்ட விரோதமான முறையில் கடல் வழியாக படகு மூலம் தலை மன்னாருக்கு இரண்டு பேர் வந்த நிலையில் அவர்களை அழைத்து வந்த மற்றும் உதவினார்கள் என்ற சந்தேகத்தில் 6 பேர்கள் புலனாய்வுத்துறை அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் இருந்து சட்ட விரோதமான முறையில் கடல் வழியாகப் படகு மூலம் தலை மன்னாருக்கு வந்த இரண்டு பேர் மடு பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ள நிலையில் அந்த இருவரும் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை மட்டக்களப்பு புனானை தனிமைப்படுத்தும் நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த இருவர் எவ்வாறு மன்னாருக்குள் வந்தார்கள் என அரச புலனாய்வுத்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் படகு மூலம் அவர்களை இலங்கைக்கு அழைத்து வர உதவிகளை மேற்கொண்டவர்கள் என்ற அடிப்படையில் பேசாலை மற்றும் வங்காலைப் பகுதிகளைச் சேர்ந்த 6 பேரை இராணுவத்தின் உதவியுடன் இன்று வெள்ளிக்கிழமை புலனாய்வுத் துறையினர் கைது செய்துள்ளனர்.

இதன்போது அந்த இருவரையும் அழைத்து வர பயன் படுத்தப்பட்ட படகு மற்றும் படகின் வெளி இணைப்பு இயந்திரம் போன்றவற்றை பொலிஸார் துள்ளுக்குடியிருப்பு கடற்கரையில் இருந்து மீட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகி றமை குறிப்பிடத்தக்கது.

## சந்திரகிரகணம் இன்று ...............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்தச் சந்திர கிரகணம் நாளை அதிகாலை 2.34 மணிக்கு நிறைவடைகிறது. சந்திர கிரகணத்தின் உச்சம் நள்ளிரவு 12.54 மணிக்கு இடம்பெறும் என்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சந்தன ஜயரட்ன மேலும் கூறினார்.

## முல்லைத்தீவு .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பாலிநகர் தனம் ஸ்ரோர்ஸ் உரிமையாளரான பாலசுந்தரராஜா பிரபாகரன் (பிரபா) என்ற வர்த்தகரே காணாமற் போயுள்ளார் என முறையிடப்பட்டுள்ளது.

கடந்த 03ஆம் திகதி முதல் அவர் காணாமல் போயுள்ளதாகவும் அவரைக் கண்டால் பாலிநகர், வவுனிக்குளம் என்ற முகவரிக்கோ அல்லது 076660 2122, 0778027498, 0778860893 என்ற இலக்கத்துக்கோ தொடர்பு கொள்ளுமாறும் மனைவி கோரிக்கை விடுத்துள்ளார்.

## கோட்டாவின் சர்வாதிகாரத்துக்கு .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதில் முந்நாள், இந்நாள் முப்படை மற்றும் பொலிஸ் அதிகாரிகளை மாத்திரம் உள்ளடக்கிய 13 பேரை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

அதேவேளை, கிழக்கு மாகாணத்தின் தொல்பொருள் இடங்களை அடையாளம் காண்பதற்கும் பாதுகாப்பதற்கும் 11 பேர் கொண்ட ஜனாதிபதி செயலணியை ஜனாதிபதி உருவாக்கியுள்ளார். அதிலும் பௌத்த மதம் சார்ந்த பிக்குகள், படை அதிகாரி மற்றும் பொலிஸ் அதிகாரி உள்ளடங்கலாக 11 சிங்களவர்களை ஜனாதிபதி நியமித்துள்ளார். ஒரு தமிழரோ, ஒரு முஸ்லிமோ இல்லாமல் இந்தச் செயலணியை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உருவாக்கியுள்ளார்.

இதற்கு எதிராக எதிர்க்கட்சிகளும், சிவில் அமைப்புகளும் கடும் எதிர்ப்புகளையும் கண்டனங்களையும் தெரிவித்து வருகின்றன. அந்த வகையில், ஜனாதிபதி கோட்டாபயவின் இந்தச் சர்வாதிகார ஆட்சி முறைக்கு எதிராக சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைவில் காட்டமான அறிக்கையை வெளியிடவுள்ளது என்று சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

## மூன்று மாதங்களுக் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அந்த சுற்றறிக்கைக்கு அமைய மூன்று மாதங்களுக்காக அரசின் மொத்த செலவு ஆயிரத்து 4300 கோடி ரூபா எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் 39800 கோடி ரூபா முதலீட்டுச் செலவுகள் மற்றும் கடனைச் செலுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பாதுகாப்பு அமைச்சுக்காக 10700 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன் சுகாதார அமைச்சுக்கு 4300 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

## 858 பேர் குணமடைவு;.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அடையாளம் காணப்பட்ட 1,797 பேரில் தற்போது 928 நோயாளிகள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அதேவேளை, 858 பேர் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர். 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, வைத்தியசாலைகளில் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் 48 பேர் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகம் அறிவித்துள்ளது.

## திகா – திலகர் ...............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செய்திகளை நம்பி குழப்பமடையாமல் கட்சி செயற்பாட்டாளர்கள் தமது பணிகளை முன்னெடுத்துச் செல்லுமாறு தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் தொழிலாளர் தேசிய முன்னணி தலைவரும் முன்னாள் அமைச்சருமான பழனி திகாம்பரம் ஊடக அறிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:-

அரசியல் கட்சிகள் போன்ற பொது அமைப்புகள் சமூக நோக்கத்துக்காக தனிநபர்கள் பலரது ஒன்றிணைப்பில் இயங்கி வருகின்றன. தொழிலாளர் தேசிய முன்னணியும் அத்தகைய ஓர் அமைப்பாகும். எமது கட்சி ஜனநாயக பண்புகளை மதிக்கும் அமைப்பாகும். அதற்கென கட்டமைப்பு உள்ளது. அதில் கருத்துச் சுதந்திரம் உள்ளது. அத்தகைய கருத்துக்கள் வெளிப்படும்போது அவை வாத, விவாதங்களுக்கு உட்பட்டு தீர்வு காண்பது ஜனநாயகப் பண்பு ஆகும்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் எமது முன்னணி சார்பாக போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் தேசியப் பட்டியல் வேட்பாளர்கள் குறித்த விபரங்கள் பேசித்தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் முன்னணியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் திலகராஜாவுக்கு தேசியப் பட்டியலில் உறுப்புரிமையைப் பெற்றுக் கொடுக்கும் முழுப் பொறுப்பையும் தலைவர் என்ற வகையில் நான் ஏற்றுக் கொண்டுள்ளேன்.

ஆனாலும், இது குறித்த எதிர்மறையான செய்திகளை இணையத்தளங்களில் வெளியிடுவதன் மூலம் கட்சிக்குள் பிளவை ஏற்படுத்துவதற்கு ஒரு குழு திட்டமிட்ட அடிப்படையில் அநாமதேய செய்திகளை வெளியிட்டு வருவது குறித்து நான் அவதானித்து வருகின்றேன்.

எமது கட்சியில் எடுக்கப்படும் தீர்மானங்களை நாம் உத்தியோகபூர்வமாக வெளியிடும் செய்திகளுக்கு மாறாக கட்சியில் பெயர் குறிப்பிடப்படும் பதவி நிலையில் உள்ள எவரது பெயரையும் குறிப்பிடாது வெளிவரும் எதிர்மறையான செய்திகளையும், திட்டமிட்டுப் பரப்பப்படும் ஆதாரமற்ற செய்திகளையும், அத்தகைய செய்தித் தளங்களையும் புறக்கணித்து விட்டு கட்சி நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்றுள்ளது.

## கடற்படை பாதிப்பு ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குணமடைந்துள்ளனர்.

இதேவேளை, வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பிய 600 பேர் இதுவரை கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## பொலிஸாரின் சூட்டில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதையடுத்து அந்தச் சந்தேகநபர் பலத்த காயங்களுடன் மொனராகலை வைத்தியசாலையில், அனுமதிக்கப்பட்டார். பின்னர் சிகிச்சை பலனின்றி வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

சந்தேக நபர் பொலிஸாரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும், பதிலுக்கு பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் சந்தேக நபர் காயமடைந்தார் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எஸ்.பி. ஜாலிய சேனரத்ன தெரிவித்தார்.

சந்தேக நபரின் வசமிருந்து கத்தியொன்றும் கையெறி குண்டும் மற்றும் துப்பாக்கியும் மீட்கப்பட்டுள்ளன.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வர்த்தமானி அறிவித்தலுக்கு மதிப்பே இல்லைப் போலும்!

நாட்டின் வர்த்தமானி அறிக்கை என்பது ஒரு முக்கியமான சட்ட ஆவணம்.

அது கேலிக் கூத்தாகின்ற விவகாரமாகியிருக்கின்றது. நாட்டின் ஆட்சி முறைப் போக்கு அவ்வளவு தூரத்துக்கு சீத்துவம் கெட்டுப் போயிருக்கின்றது.

ஒரு குறிப்பிட்ட திகதிகளில் நாட்டின் தேர்தல் ஆணையம் பொதுத் தேர்தலுக்கான – நாட்டின் சட்டவாக்கல் சபைக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் ஓர் உயர் மட்டத் தேர்தலுக்கு – வேட்பு மனுக்களை ஏற்றுக் கொள்கின்றது. அது நடந்து சுமார் ஒன்றரை மாதங்களுக்குப் பின்னர் வந்து "நாங்கள் வேட்புமனுக்களை ஏற்ற நாள்கள் பொது விடுமுறை தினங்களாம். அது பற்றிய வர்த்தமானி அறிவித்தல் எங்களுக்குப் பின்னர்தான் கிடைத்தது" என்று சாக்குப் போக்குச் சொல்கின்றது தேர்தல் ஆணையம்.

நாட்டின் வர்த்தமானி அறிவித்தல் மூலம் என்ன அறிவிப்பு விடுக்கப்பட்டுகின்றது என்பது தேர்தல் ஆணையத்துக்குத் தெரியவில்லை.

நாட்டின் தேர்தல் ஆணையம் பகிரங்க அறிவிப்பு மூலம் நாடாளுமன்றைக் கலைக்கும் ஜனாதிபதியின் பிரகடனத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு வேட்புமனுக்களைக் கோரிப் பெற்றுக் கொள்கின்றது. அந்தத் தினங்களை தேர்தல் ஆணையத்துக்குத் தெரியாமல் தம்பாட்டில் பொது விடுமுறை தினமாக அறிவிக்கின்றது பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு.

மற்றைய தரப்புகளும் கூட இத்தகைய வர்த்தமானி அறிவித்தலைக் கிள்ளுக் கீரையாகத்தான் பார்க்கின்றன போலும்.

ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைக்கும் வர்த்தமானி அறிப்பை விடுவிக்கின்றார். அதன்படி புதிய பொதுத் தேர்தல் ஏப்ரல் 25 ஆம் திகதி நடைபெற வேண்டும். புதிய நாடாளுமன்றம் மே 14 ஆம் திகதி கூட வேண்டும். அந்த நாடாளுமன்றக் கலைப்புத் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், பின்னது இரண்டும் அந்தந்தத் திகதியில் நடக்கவேயில்லை.

அவற்றுக்கு மாற்று ஏற்பாடு, ஒழுங்கு என்ன என்றால், அதற்கான மாற்று ஒழுங்கு முறைகளை ஜனாதிபதியும் அறிவிக்கவில்லை; தேர்தல் ஆணையமும் சரியாக அறிவிக்கவில்லை.

இது குறித்து உயர்நீதிமன்றத்திடம் முறையிட்டும் பயனில்லை. எதுவும் நடக்கவில்லை. இது விவகாரத்தை திருத்தியமைக்கு எந்த உத்தரவும் – சாதகமான நிலைப்பாடும் – உயர்நீதிமன்றத்தினால் வெளிப்படுத்தப்படவில்லை.

அது மாத்திரமல்ல, இதற்கு மேலும் உயர் நீதிமன்றத்திடமிருந்து ஏதும் நிவாரணம் – விமோசனம் – பரிகாரம் – இந்த விவகாரத்தில் கிடைக்கும் என்ற சாத்தியப்பாடே இல்லாதவாறு உயர்நீதிமன்றக் கதவுகள் மூடப்பட்டு விட்டன.

கடைசியாக ஜூன் 20 ஆம் திகதி தேர்தல் என்று தேர்தல் ஆணையம் வர்த்தமானி அறிவித்தல் விடுத்தது.

இதையொட்டித் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் மீதான விசாரணையின்போது ஜூன் 20 ஆம் திகதி தேர்தல் நடத்த மாட்டோம் என்று தேர்தல் ஆணையம் மன்றுக்குத் தெரியப்படுத்தியதே தவிர, அதை உயர்நீதிமன்று ஏற்றுக் கொண்டதா, அங்கீகரித்ததா என்ற எதுவும் – எந்தப் பதிலும் – இல்லை.

குறைந்த பட்சம் ஜூன் 20 ஆம் திகதி தேர்தல் வாக்களிப்பு என்ற தனது அறிவிப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது, பிறிதொரு தினத்தில் அத்தேர்தல் நடக்கும் என்ற அறிவிப்புக் கூட வர்த்தமானி மூலமாவது மக்களுக்கு இன்னமுமே தெளிவுபடுத்தப்படவில்லை.

'வர்த்தமானியில் ஒன்றை அறிவிப்போம். விருப்பம் என்றால் – வசதி என்றால் – அதைச் செய்வோம். செய்ய முடியாவிட்டால், அப்படிச் செய்யப்படமாட்டாது என்பதையும் கூட வசதிப்படும்போது தான் தெரிவிப்போம்' என்ற திமிர்த்தனமான பாங்கில்தான் வர்த்தமானி அறிவித்தல்களுக்கு தேர்தல் ஆணையம் போன்ற தரப்புகள் மரியாதை தருகின்றன போலும்.

ஜூன் 20 தேர்தல் என்று வர்த்தமானி அறிவித்தலை விடுத்த தேர்தல் ஆணையம், அத்திகதியில் அதை நடத்த முடியாது என்ற நிலை உறுதியானால் அந்த அறிவிப்பை வாபஸ் பெற்று மாற்று வர்த்தமானி அறிவிப்பு மூலம் மக்களைத் தெளிவுபடுத்த வேண்டும்.

அப்படிச் செய்யாமல் விட்டேத்தியாக தேர்தல் ஆணையம் போன்றவை செயற்படுவது வர்த்தமானி அறிவித்தல் முறைமையையே உதாசீனம் செய்து, பொறுப்பற்றதனமாக நடப்பதாகவே அர்த்தம் பண்ணப்படும்.

# தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவு கிடைப்பது உறுதி

## 'மொட்டு' அணி நம்பிக்கை

கொழும்பு, ஜூன் 05

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கு நிச்சயம் கிடைக்கும்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கு ஜனாதிபதித் தேர்தலில் தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவு முழுமையாக கிடைக்கப்பெறவில்லை என்று குறிப்பிட முடியாது. கணிசமான அளவு ஆதரவு கிடைக்கப்பெற்றுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலத்தில் இருந்து அந்த அரசின் மீது தமிழ் மக்கள் மத்தியில் தவறான குற்றச்சாட்டுக்கள் மாத்திரமே முன்வைக்கப்பட்டன.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் மிகத் துரிதமாக அபிவிருத்தியை முன்னெடுத்தார். தமிழ் அரசியல்வாதிகள் தங்களின் தேவைகளுக்காகப் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து நல்லாட்சி அரசை ஸ்தாபித்தார்கள்.

நல்லாட்சி அரசின் பயனை எவரும் பெற்றுக்கொள்ளவில்லை. குறிப்பாக தமிழ், முஸ்லிம் மக்கள் கடந்த அரசில் பாரிய நெருக்கடிகளுக்கு உட்படுத்தப்பட்டார்கள். தேசிய பாதுகாப்பு அரசியல் மயப்படுத்தப்பட்டமையால் பாரிய விளைவுகள் நாட்டில் ஏற்பட்டன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தேசிய பாதுகாப்புக்கு மாத்திரமே முன்னுரிமை வழங்குவார். நாடாளுமன்றத் தேர்தலிலும் தேசிய பாதுகாப்பு, துரித அபிவிருத்தி ஆகிய விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும்.

நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி வெற்றிபெறும். தமிழ், முஸ்லிம் மக்கள் இம்முறை நிச்சயம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் பலமான அரசில் பங்குதாரர்களாகுவார்கள் - என்றார்.

## அமெரிக்கச் சர்ச்சையை அடுத்து

# இராஜதந்திரிகளுக்கு புதிய விதிமுறைகள்

இலங்கைக்கு வருகை தந்த அமெரிக்க இராஜதந்திரி ஒருவர் கொரோனா பரிசோதனையை தவிர்த்தார் என்று எழுப்பப்பட்ட சர்ச்சையை அடுத்து நாட்டுக்குள் வரும் இராஜ தந்திரிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கான புதிய விதிமுறைகள் வெளிவிவகாரத்துறை அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந் நாட்டுக்கு வருகை தரும் இராஜதந்திரிகள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் 72 மணித்தியாலங்களுக்கு முன் அவர்கள் புறப்பட்ட நாட்டில் பெறப்பட்ட பிசிஆர் பரிசோதனை அறிக்கையை கட்டுநாயக்க விமான நிலையத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என புதிய விதிமுறை கூறுகின்றது.

குறித்த பரிசோதனை அறிக்கையை சமர்ப்பிக்க தவறும் அனைத்து இராஜதந்திரிகள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் மேற்கொள்ளப்படும் பிசிஆர் பரிசோதனைகளுக்கு முகம்கொடுக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பரிசோதனைகளுக்கு முகம் கொடுக்காத குடும்ப உறுப்பினர்கள் மற்றும் ஏனைய ஊழியர்கள் மீது தனிமைப்படுத்தல் சட்டத்துக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

அவர்கள் 14 நாள்கள் அவர்களின் தங்குமிடத்தில் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட வேண்டும் எனவும் அதுகுறித்து குறித்த தூதரகத்தினால் முழுவதுமாக கண்காணிக்கப்பட வேண்டும் எனவும் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தல் காலம் நிறைவடைந்த பின்னர் கடமைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் அவர்கள் மீண்டும் பீசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என வெளவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளை இலகுபடுத்தும் வகையில் இராஜதந்திரிகள் தமது வருகை குறித்து முன்கூட்டியே அமைச்சுக்குத் தெரியப்படுத்தி விடயங்களை இலகுபடுத்திக்கொள்ளலாம் என்றும் அது தெரிவித்துள்ளது.

# சகல பயணிகளுக்கும் முகக் கவசம் கட்டாயம்

## போக்குவரத்து அமைச்சர் அறிவிப்பு

சகல பயணிகளும் முகக் கவசம் அணிய வேண்டும் என போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

முகக்கவசம் அணியாதவர்களுக்கு பொதுப் போக்குவரத்து சேவையில் பயணிப்பதற்கு இடமளிக்கப்பட மாட்டாது என்று போக்குவரத்து சேவைகள் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அத்தியவசியமற்ற பயணங்களுக்காக பொதுச் சேவையினை பயன்படுத்த வேண்டாம் என போக்குவரத்து அமைச்சர் பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

எதிர்வரும் திங்கட்கிழமையில் இருந்து இலங்கையில் பொதுப் போக்குவரத்து சேவைகள் வழமைக்கு திரும்பவுள்ளன. இதன்போது சுகாதார ஆலோசனைகள் உரிய வகையில் நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவித்த போக்குவரத்து அமைசசர் ஆசனங்களின் எண்ணிக்கைக்கு அமைவாக பயணிகளுக்கு அனுமதி வழங்குவது கட்டாயமாகும் என்றும் தெரிவித்தார்.

பஸ் மற்றும் ரயில்வே நிலையங்களில் கை கழுவுவதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. சகல பஸ் களிலும் ஆசனங்களில், 50 வீதமான பயணிகளுடன் பஸ் தனது பயணத்தை ஆரம்பிக்க வேண்டும் என்றும் கூறினார்.

இதேவேளை, பாடசாலை பஸ்கள் மற்றும் சுற்றுலா பயணங்களுக்கு பயன்படுத்தப்படும் பஸ்களை தற்காலிகமாக பயணிகள் போக்குவரத்திற்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த பஸ்களை பதிவு செய்யும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடுத்த வேண்டிய அவசியம் ஏற்படின் இந்த பஸ்களும் சேவையில் ஈடுபடும் என்று அமைச்சர் மஹந்த அமரவீர மேலும் தெரிவித்தார்.





### அமெரிக்காவைத் தொடர்ந்து மெக்சிக்கோ

# பொலிஸ் காவலில் நபர் சாவு மக்கள் – பொலிஸார் மோதல்



மெக்சிக்கோவின் குவாடலஜாரா நகரில் கொரோனா வைரஸ் தொற்று ஆரம்பிக்கப்பட்ட தருணத்தில் முகக்கவசம் அணியவில்லை என்ற காரணத்தால் கைது செய்யப்பட்ட நபர் ஒருவர் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்தபோது சாவடைந்துள்ளார்.

கட்டுமானத் தொழிலாளியான ஜியோவானி லோபஸ் என்பவரே இவ்வாறு சாவடைந்தவராவார். இந்த நிலையில் அவருடைய சாவுக்கு நீதி கோரி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஜலிஸ்கோ மாநில அரசின் அரண்மனைக்கு வெளியே இந்தப் போராட்டம் நடந்தது.

அமெரிக்காவில் ஜோர்ஜ் ஃபிளாய்ட் என்ற கறுப்பினத்தவர் பொலிஸாரால் கொல்லப்பட்டமையைக் கண்டித்து உலகெங்கிலும் எதிர்ப்புப் போராட்டங்கள் நடந்துவரும் நிலையில் மெக்சிக்கோவில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. முகக்கவசம் அணியவில்லை என்ற குற்றத்தில் கைது செய்யப்பட்டவர் காவலில் வைக்கப்பட்டிருந்த போது இறந்தமைக்குப் பொலிஸ் அதிகாரிகளே பொறுப்புக் கூற வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

அத்தோடு ஜலிஸ்கோ மாநிலத் தலைநகரின் மையத்திலுள்ள அரண்மனை உள்ளிட்ட கட்டடங்களைச் சேதமாக்கியதுடன், பொலிஸாரின் வாகனங்களைத் தீக்கிரையாக்கினர், இதனால் போராட்டக்காரர்களுக்கு எதிராகப் பொலிசார் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

மக்களின் இந்தப் போராட்டம் முறையற்றது என்று ஜாலிஸ்கோ ஆளுநர் என்ரிக் அல்பாரோ தெரிவித்தார். ஆனால் குறித்த நபரின் சாவு பற்றிய மேலதிக விவரங்கள் எதையும் அவர் வழங்கவில்லை. ஆனால் இதுகுறித்து விசாரணை நடத்தப்படும் என்று அவர் உறுதியளித்தார்.

## யானையை கொன்றதாக தொழிலாளி ஒருவர் கைது



கேரளாவில் அன்னாசிப் பழத்துக்குள் வெடிமருந்தை வைத்து யானைக்கு வழங்கி அதைக் கொன்ற வழக்கில் ஒருவரை வனக்குற்றப் பிரிவினர் கைது செய்துள்ளனர் என்று வனத்துறை தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் குறித்துக் குறிப்பிட்ட கேரளா முதல்வர் பினராயி விஜயன், யானையைக் கொலை செய்தவர்கள் யாராக இருந்தாலும் கண்டு பிடித்து தண்டிக்கப்படுவார்கள். குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்படுவார்கள். இதுவரை 3 பேர் மீது கடும் சந்தேகம் அடைந்து அவர்களை வனத்துறையினர் விசாரித்து வருகின்றனர். மேலும், இருவரையும் தேடி வருகிறார்கள் எனத் தெரிவித்தார்.

இந்த நிலையில் யானையைக் கொன்ற வழக்கில் பாலக்காடு மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவரை வனக்குற்றப்பிரிவுத் துறையினர் கைது செய்துள்ளனர். இதுகுறித்து கேரள வனத்துறை அமைச்சர் ராஜு நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், அன்னாசிப்பழத்தில் வெடிவைத்து யானையைக் கொலைசெய்த விவகாரத்தில் ஒருவரை வனத்துறையினர் கைது செய்துள்ளனர். அவர் பெயர் பி. வில்சன். தனியார் தேயிலைத் தோட்டத்தில் பணியாற்றி வருகிறார். இன்று மாலைக்குள் மேலும் பலர் கைது செய்யப்படுவார்கள் எனத் தெரிவித்தார்.

இதற்கிடையே வனத் துறையினர் நேற்று 3 பேரிடம் விசாரணை நடத்தியதில் அதில் இருவர் விளைநிலங்களைக் காட்டுப்பன்றிகள் சேதப்படுத்துவதைத் தடுக்க அன்னாசிப்பழத்தில் வெடி மருந்து வைத்தோம் என்று தெரிவித்துள்ளனர். ஆனால், அவர்கள் யானைக்கு அதனை வழங்கினார்களா என்பதை வனத்துறையினர் உறுதி செய்யாததால் அவர்களைக் கைது செய்யவில்லை எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. காட்டுப்பன்றிகளிடம் இருந்து பயிர்களைக் காப்பதற்காக வைக்கப்பட்டிருந்த வெடிமருந்து நிரப்பப்பட்ட அன்னாசிப் பழங்களை யானை பசியில் உண்டுள்ளது என்று இந்திய வனத்துறை அதிகாரி ஏபிக்யூம் முன்னதாகத் தெரிவித்திருந்தார்.

## ஜூன் 8 முதல் இந்தியாவில் ஆலயங்களைத் திறக்கலாம்



கொரோனா வைரஸ் பரவலையடுத்து நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவைப் படிப்படியாகத் தளர்த்திவருவதைத் தொடர்ந்து, எதிர்வரும் 8ஆம் திகதியிலிருந்து வழிபாட்டுத் தலங்களைத் திறப்பதற்கு அனுமதியளிக்கவிருப்பதாகத் தெரிவித்து அதற்குரிய வழிகாட்டி நெறிமுறைகளை இந்திய சுகாதார அமைச்சு வெளியிட்டது.

இதன்படி வழிபாட்டுத் தலங்களின் நுழைவாயிலில் சானிடைசர் வைத்தல், வருபவர்களுக்கு தெர்மல் பரிசோதனை, முகக்கவசம் அணிந்திருத்தல், வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவது, தடுப்பு நடவடிக்கைகள் குறித்த பதாகைகள், சுவரொட்டிகளை வைத்தல், சமூக விலகலைக் கடைப்பிடித்தல், புனித நூல்கள், சிலைகளைத் தொட அனுமதியில்லை, கூட்டம் கூடுதல், கூட்டமாக நின்று வழிபடத் தடை, குழுவாகப் பக்திப் பாடல்களைப் பாடத் தடை, கைகுலுக்கி, கட்டிப்பிடித்து வாழ்த்துக் கூறுதல் கூடாது. பிரசாதங்களைக் கைகளால் வழங்குவது கூடாது.

தரைப்பகுதியைக் கிருமிநாசினி கொண்டு அடிக்கடி சுத்தம் செய்ய வேண்டும் எனச் சுகாதார அமைச்சால் பலதரப்பட்ட அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன. இந்த அறிவுறுத்தல்களைப் பின்பற்றி வழிபாட்டிடங்களைத் திறக்கலாம் என்று கூறப்பட்டிருக்கிறது.

## கீழடியில் விலங்கின் எலும்பு!

இந்தியாவின் சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகேயுள்ள கீழடியில் நடத்தப்பட்டுவருகின்ற அகழாய்வில் விலங்கின் எலும்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கீழடியில் பல கட்டங்களாக அகழாய்வு நடந்துவருகிறது. பெப்ரவரி மாதம்



19ஆம் திகதி அங்கு 6ஆம் கட்ட அகழாய்வு தொடங்கியது.

முதற்கட்டமாக கீழடி, கொந்தகை, அகரம் ஆகியமூன்று இடங்களில் குழிகள் தோண்டப்பட்டன. கொரோனாத் தொற்றுக் காரணமாக இந்திய அரசு விதித்த ஊரடங்கு உத்தரவு காரணமாக அங்கு அகழாய்வு பணி முடங்கியது. பின்னர் ஊரடங்கு தளர்வால் சில தினங்களுக்கு முன் மீண்டும் அகழாய்வுப் பணிகள் தொடங்கின.

மணலூரில் தோண்டிய ஒரு குழியில் சுடுமண்ணால் ஆன உலையும், கீழடியில் விலங்கின் எலும்பும் கண்டெடுக்கப்பட்டன. இந்த எலும்பு ஏற்கெனவே கிடைத்த எலும்புத் துண்டுகளை விடப் பெரிதாக உள்ளது. முழு ஆய்வுக்குப் பிறகே அது எந்த விலங்கின் எலும்பு என்பது தெரியவரும் எனத் தொல்லியல் ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

# 8 ஆண்டுகளில் 750 புலிகள் சாவு!

கடந்த 8ஆண்டுகளில் வேட்டையாடுதல் உட்பட்ட காரணங்களால் இந்தியாவில் 750 புலிகள் சாவடைந்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. இந்த 750 புலிகளில் 369 புலிகள் இயற்கையாகவும் 168 புலிகள் வேட்டையாடப்பட்டும் சாவடைந்துள்ளன என்று கூறப்பட்டுள்ளது.

இதில் 70 புலிகளின் சாவு தொடர்பாக விசாரணை நடந்து வருகிறது. 42 புலிகள் விபத்து, இயற்கைச் சீற்றங்களால் சாவடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய மத்திய பிரதேச மாநிலத்தில் 173 புலிகள் சாவடைந்துள்ளன. இதில் 38 புலிகள் வேட்டையாடப்பட்டும், 94 புலிகள் இயற்கையாகவும் சாவெய்தியுள்ளன.

19 புலிகள் சாவடைந்தமை தொடர்பாக விசாரிக்கப்பட்டு வருகிறது. 6 புலிகள் இயற்கைக்கு மாறாக சாவடைந்துள்ளன. 16 புலிகள் வலிப்பு ஏற்பட்டுச் சாவடைந்துள்ளன. மத்திய பிரதேச மாநிலத்தில்தான் அதிகபட்சமாக 526 புலிகள் வாழ்கின்றன. இரண்டாவதாக மகாராஷ்டிராவில் கடந்த 8 ஆண்டுகளில் 125 புலிகள் சாவடைந்துள்ளன. கர்நாடகாவில் 111, உத்தரகாண்டில் 88, தமிழகம், அசாம் மாநிலத்தில் 54, கேரளா, உத்தரப் பிரதேசத்தில் தலா 35, ராஜஸ்தானில் 17, பிஹாரில் 11, மேற்கு வங்கம், சத்தீஸ்கரில் தலா 10, ஆந்திரா, ஒடிசாவில் 7, தெலங்கானாவில் 5, டெல்லி, நாகாலாந்தில் தலா 2, ஹரியாணா, குஜராத்தில் தலா 1. என இந்தியா முழுதும் கடந்த எட்டு ஆண்டுகளில் சாவடைந்த புலிகள் குறித்துத் தகவல் வெளியிடப்பட்டிருக்கிறது. கடந்த 8 ஆண்டுகளில் வேட்டைல் மூலம் புலிகள் அதிக



க எண்ணிக்கையில் கொல்லப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.






ரஷ்யாவிலுள்ள எண்ணெய் சுத்திகரிக்கும் நிலையம் ஒன்றில் இருந்து 20 ஆயிரம் தொன் வரையிலான மசகு எண்ணெய் கசிந்து ஆற்றில் கலந்ததால் அந்த ஆற்றுத் தண்ணீர் பல மைல் தூரம் வரையில் சிவப்பாகக் காட்சி அளிக்கிறது. ரஷ்யாவின் சிபேரியன் நகரத்தின் வடக்குப் பகுதியிலுள்ள நோரில்ஸ்க் என்ற இடத்திலுள்ள மின் நிலையத்திலிருந்தே இந்தக் கசிவு ஏற்பட்டுள்ளது. இதனால் அந்த மாநிலத்தில் அவசர நிலையை அறிவித்துள்ளார் ரஷ்ய அதிபர் புடின். குறித்த ஆறு மீண்டும் பழைய நிலையை அடைவதற்குச் சுமார் 10 ஆண்டுகள் ஆகும் என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கவலை தெரிவித்தனர்.

# கொரோனாவை காரணம் காட்டி எகிப்தில் சிறுமிகளுக்கு கொடூரம்

கொரோனா வைரஸ் தொற்று ஏற்படாமல் இருப்பதற்காகத் தடுப்பூசி செலுத்தப்படுவதாகக் கூறிச் சிறுமிகளுக்கு மயக்க ஊசி செலுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் எகிப்தில் நடந்துள்ளது. கொரோனா வைரஸ் தொற்றுக்குச் சிகிச்சை அளிப்பதாகக் கூறி இவ்வாறு தனது மூன்று இளம் மகள்களுக்கும் பெண்ணுறுப்புச் சிதைப்புச் சடங்கைச் செய்துள்ளார் அவர்களது தந்தை.

குறித்த சிறுமிகளின் தந்தையும் அவருக்கு உடந்தையாக இருந்த மருத்துவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த தந்தை மற்றும் பிள்ளைகளிடமிருந்து பிரிந்து வாழும், அவர்களின் தாய் அளித்த முறைப்பாட்டினாலேயே இந்தக் கைதுகள் நடந்துள்ளன. எகிப்தில், சிறுமிகளுக்குப் பெண்ணுறுப்புச் சிதைப்புச் செய்வது 2008 முதல் குற்றமாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், இந்த சடங்குக்கு சிறுமிகள் உட்படுத்தப்படுவது தொடர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# விஜய் மல்லையாவை நாடு கடத்துவதில் சிக்கல்

## பிரிட்டன் அறிப்பு



லண்டன்,ஜூன் 05

பிரிட்டனில் தஞ்சமடைந்துள்ள இந்தியத் தொழிலதிபர் விஜய் மல்லையாவை நாடு கடத்துவதில் சட்டச் சிக்கல் இருப்பதாகப் பிரிட்டன் அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாகப் பிரிட்டனின் உயர் ஆணையகச் செய்தித்தொடர்பாளர் கூறுகையில் - விஜய் மல்லையாவை நாடு கடத்துவதில் சட்டச் சிக்கல் இருக்கிறது. அதற்குத் தீர்வு கண்டால்தான், அவரை நாடு கடத்தும் ஏற்பாடுகளைச் செய்ய முடியும். இதற்கு எவ்வளவு காலம் ஆகும் என்று சொல்ல முடியாது. கூடிய விரைவில் தீர்வு காண்பதற்கு முயன்று வருகிறோம் - என்றார்.

விஜய் மல்லையா விவகாரம்

இந்தியாவைச் சேர்ந்த பிரபல தொழிலதிபர் விஜய் மல்லையா, இந்திய வங்கிகளில் இந்திய மதிப்பில் ரூ.9 ஆயிரம் கோடி வரை கடன் பெற்றுவிட்டு அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்தாமல், 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் லண்டனில் தஞ்சமடைந்தார். அவரை நாடு கடத்துமாறு இந்தியா விடுத்த வேண்டுகோளின் பேரில், 2017ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அவர் கைது செய்யப்பட்டார். பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்ட அவர், பல்வேறு கட்டங்களாக மேல் முறையீடுகளைச் செய்தார். அவை அனைத்தும் தள்ளுபடியாகின. இதையடுத்து, அவரை நாடு கடத்தி இந்தியாவின் மும்பை சிறையில் அடைப்பதாக இருந்தது. இந்த நிலையிலேயே விஜய் மல்லையாவை நாடு கடத்துவதில் சட்டச்சிக்கல் இருப்பதாகப் பிரிட்டன் அரசு தெரிவித்துள்ளது.




# பாடசாலையில் கத்திக் குத்து சீனாவில் 39பேருக்குக் காயம்

பீஜிங்,ஜூன் 05

சீனாவில் ஆரம்பப் பாடசாலை ஒன்றில் கத்திக்குத்துத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலில் மாணவர்கள், பணியாளர்கள் உள்ளடங்கலாக 39பேர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் சீனாவின் குவின்சி சுஹாங் மாகாணத்தில் நடந்துள்ளது. இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது: சீனாவில் ஆரம்பப் பாடசாலையில் கத்தி கொண்டு நடத்தப்பட்ட தாக்குதலில் 37 குழந்தைகள் மற்றும் இரண்டு பணியாளர்கள் காயமடைந்தனர். காயம் அடைந்த அனைவரும் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். தாக்குதல் நடத்திய நபர் அந்தப் பாடசாலையில் காவலாளியாகப் பணியாற்றியவர் என்று தெரிவிக்கப்படுகிறது. தற்போது அந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். காயமடைந்த பிள்ளைகள் 6 முதல் 12 வயதுக்கு உட்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# சீன வானூர்திகளுக்கு தடை விதித்தது அமெ.

நியூயோர்க்,ஜூன் 05

சீனாவிலிருந்து அமெரிக்காவுக்குள் நுழைகின்ற பயணிகள் வானூர்திகளுக்கு ஜூன் மாதம் 16ஆம் திகதியிலிருந்து தடை விதிப்பதாக ட்ரம்ப் நிர்வாகம் அறிவித்துள்ளது. கொரோனா பாதிப்பில் இருந்து மீளத் தொடங்கிய போதும், அமெரிக்க வானூர்திகளை நாட்டுக்குள் அனுமதிக்காத சீனாவைத் தண்டிக்கும் வகையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்காவின் போக்குவரத்துறை தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் மற்றும் ஹொங்கொங் விவகாரம் உள்ளிட்டவற்றில் அமெரிக்கா - சீனா நாடுகளுக்கிடையே கருத்து வேறுபாடு நிலவி வந்த சூழ்நிலையில், வானூர்திப் போக்குவரத்து மோதலாக உருவெடுத்துள்ளது. கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியிலும் குறைந்த எண்ணிக்கையில் சீனா - அமெரிக்கா இடையே பயணிகள் வானூர்திகள் சேவை இயக்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

# சுற்றுச்சூழல் தினத்தில் துப்புரவில் அதிரடிப்படை

உலக சுற்றுச்சூழல் தினமான இன்று பெரிய நீலாவணை சிறப்பு அதிரடிப் படை முகாமைச் சேர்ந்த படையினர் சுற்றாடலில் துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டனர்.

1974ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வோரு ஆண்டும் ஜுன் மாதம் 5ஆம் திகதி உலக சுற்றுச்சூழல் பாதுகாப்பு தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. 2020ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பு தினத்துக்கான கருப்பொருளாக 'பல்லுயிர்ப் பெருக்கத்தை பாதுகாப்போம்' என ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

உலக சுற்றுச்சூழல் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு நாட்டின் பல பாகங்களிலும் சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு பெரியநீலாவணை விசேட அதிரடிப்படை முகாம் ஏற்பாடு செய்த துப்புரவு நிகழ்வு இன்று முகாம் பொறுப்பதிகாரி எம்.எச்.ஏ.மதுரங்க தலைமையில் முகாமை அண்டிய பகுதிகளில் நடைபெற்றது.

கோவில்கள், வடிகான்கள், வீதியோரங்கள் போன்ற இடங்களில் தேங்கிக் காணப்பட்ட கழிவுகளை அதிரடிப்படை வீரர்கள் அகற்றி சுத்தப்படுத்தினார்கள்.







## காணாமற்போனோரின் மற்றொரு பெற்றவரும் இன்று உயிரிழந்தார்

போரின் போது காணாமற் போனவர்களைத் தேடிப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த தந்தையொருவர் இன்று காலை உயிரிழந்தார்.

உயிரிழந்தவரான வவுனியா சுமாங்குளத்தில் வசிக்கும் சின்னச்சாமி நல்லதம்பி (வயது 71) வீட்டில் உள்ள மரமொன்றில் ஏறியபோது கீழே வீழ்ந்து உயிரிழந்தார்.

காணாமற்போனவர்களை மீட்டுத்தருமப்படி வலியுறுத்தி வவுனியாவில் வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்கு முன்பாக ஆயிரத்து 200 நாள்களுக்கும் மேலாக நடந்துவரும் போராட்டத்தில் தொடர்ச்சியாகப் பங்கினித்து வந்தவர் நல்லதம்பி.

போராட்டத்தின் 1200ஆவது நாள் நினைவு கவனவீர்ப்புப் போராட்டத்திலும் அவர் கலந்து கொண்டிருந்தார்.

இவரது மகன் 2008ஆம் ஆண்டு வவுனியா நீதிமன்றத்திற்கு முன்பாக வைத்து இனந்தெரியாதோரால் கடத்திச்செல்லப்பட்டிருந்தார். அந்தக் காலப் பகுதியில் வவுனியா நகரம் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது.

காணாமற்போனவர்களைத் தேடிப் போராட்டம் நடத்திவரும் பெற்றோர்களில் பலரும் வயது மூப்பு மற்றும் நோய் காரணமாக தொடர்ச்சியாக உயிரிழந்து வருகிறார்கள். அந்த வரிசையில் கடைசியாக நிகழ்ந்திருக்க க்கூடிய உயிரிழப்பு நல்லதம்பியுடையது.

# பஸ்களில் 50 சதவீத ஆசனங்கள் நிரம்பியதும் புறப்படவேண்டும்

## போக்குவரத்து அமைச்சு பணிப்பு

**கொழும்பு, ஜுன் 05**

**பஸ் நிலையங்களில் 50 வீத ஆசனங்களில் பயணிகள் ஏறியதும் பஸ்கள் சேவையை ஆரம்பிக்கவேண்டும். அதன்மூலம் தரிப்பிடங்களில் உள்ள பயணிகள் அனைவரும் பயணிக்க வாய்ப்புக் கிடைக்கும் என்று போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சு அறிவித்துள்ளது.**

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் இந்த நடைமுறை பின்பற்றப்படவேண்டும் என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பஸ்கள் இருக்கைகளின் எண்ணிக்கையின்படி மட்டுமே பயணிகளை ஏற்றிச் செல்வது கட்டாயமாகும், அதே நேரத்தில் அனைத்து பயணிகளும் முகக்கவசம் அணியவேண்டும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது. முகக் கவசம் அணியாத எந்த ஒரு பயணியும் பொது போக்குவரத்து வழியாக பயணிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

பஸ் நிலையங்கள் மற்றும் ரயில் நிலையங்களில் பயணிகள் கைகளை கழுவுவதற்கான வசதிகள் நிறுவப்பட்டுள்ளன.

கொவிட் - 19 பரவுவதைத் தடுப்பதற்கான சுகாதார சேவை வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிக்க கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று பயணிகள் போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சுத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கை போக்குவரத்துச் சபையின் 5 ஆயிரத்து 300 பஸ்களும் மற்றும் 23 ஆயிரம் தனியார் பஸ்களும் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன. எனினும் பயனுள்ள பயணிகள் போக்குவரத்து சேவைகளுக்கு இந்த எண்ணிக்கை இன்னும் போதுமானதாக இல்லை என்று போக்குவரத்து அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதனால் பாடசாலை, சுற்றுலா மற்றும் பிற சேவைகளில் ஈடுபடும் பஸ்களை தற்காலிகப் பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுத்தும் நோக்குடன் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

முயலும் ஆமையும்

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு



தினம் ஒரு தலைப்பு

சித்திரப்போட்டி

நாளை (06/ 06/2020) தலைப்பு
முயலும் ஆமையும்

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

# சட்டவிரோத கடல் செயற்பாடுகளால் நாட்டுக்குள் தொற்று பரவும் அபாயம்

## எச்சரிக்கிறது சுகாதாரப் பரிசோதகர் சங்கம்

கடல் வழியூடாக இலங்கைக்குள் கொரோனா தொற்று ஊடுருவி அது சமூகத்துக்குள் பரவும் ஆபத்து உள்ளது என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவதாவது:-

இந்தியா மற்றும் மாலைதீவில் கொரோனா பெருந் தொற்று அதிகரித்துள்ளது. இந்த நாடுகளில் இருந்து கடல் ஊடான சட்டவிரோத நடவடிக்கைகள் இலங்கைக்கு இடம்பெறுகின்றன.

இவ்வாறு கடல் வழி சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களால் நாட்டுக்குள் கொரோனா பெருந்தொற்றுப் பரவும் அபாயம் இருக்கின்றது.

நீர்கொழும்பில் இருந்து மன்னார் வரையிலான கடல் பகுதிகளில் இத்தகைய கடல் வழி சட்டவிரோத நடவடிக்கைகள் அதிகளவில் இடம்பெறுகின்றன.



நடுக் கடலில் வைத்து இரு பகுதி சட்டவிரோத செயற்பாட்டாளர்களும் மீன், கஞ்சா, ஹெரோயின் என்பவற்றைத் தமக்கிடையில் பரிமாறிக் கொள்ளும்போது கொரோனாவும் பரிமாறிக்கொள்ளப்பட வாய்ப்பிருக்கின்றது.

இது குறித்து அவதானமாக இருக்கவேண்டும். கொரோனா தாக்கத்தின் இரண்டாவது அலையில் இருந்து நாட்டையும் மக்களையும் காப்பாற்றுவதற்கு தீவிர நடவடிக்கை எடுக்கப்படுவது அவசியம் - என்றார் அவர்.

## ஓட்டமாவடியில் இரண்டாம் கட்ட 5,000 ரூபா வழங்கப்படுகிறது

ஓட்டமாவடி பிரதேச செயலக பிரிவில் சமுர்த்தி உதவி பெறுவதற்கான காத்திருப்புப் பட்டியலில் உள்ளவர்களுக்கு இரண்டாம் கட்ட கொரோனா கொடுப்பனவு 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகின்றது.

எட்டு கிராம சேவகர் பிரிவுகளிலுள்ள சமுர்த்தி பெறுவதற்குக் காத்திருக்கும் ஆயிரத்து 671 குடும்பங்களுக்கு இந்த இரண்டாம் கட்டக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

முதல் கட்டத்தில் இந்தக் குடும்பங்களுக்கு 83 லட்சத்து ஐம்பத்தையாயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலாளர் திருமதி நிஹாரா மௌஜூத் தெரிவித்தார்.

**இன்று உலக சுற்றுச்சூழல் தினமாகும். அதையொட்டி இக் கட்டுரை இங்கு பிரசுர மாகின்றது.**

பஞ்சாட்சரம் ஜோன் டிலக்ஷன்



# மனிதனுக்கு சுற்றுச்சூழல் பற்றிய அறிவும், தெளிவும் ஏன் அவசியம்?

இன்று உலக சுற்றுச்சூழல் தினமாகும். சுற்றுச்சூழலுக்கும், மனிதனுக்கும் இடையிலான தொடர்பு இன்றியமையாதது. மனிதன் ஒவ்வொரு நிமிடமும் சுற்றுச்சூழலுடன் தொடர்புபடுகின்றான். சுற்றுச்சூழல் இன்றி மனிதன் இல்லை. ஒவ்வொரு மனிதனுக்கும் சுற்றுச்சூழல் பற்றிய அறிவும், தெளிவும் காணப்படுவது மிக அவசியமாகும். சுற்றுச்சூழல் பற்றிய அறிவு மற்றும் தெளிவும் இருந்தால் மட்டுமே சுற்றுச்சூழல் எமக்கு தருகின்ற பயன்கள் என்ன, சுற்றுச்சூழல் இல்லாமல் ஏன் எம்மால் வாழமுடியாது, சுற்றுச்சூழல் அழிப்பினால் எதிர்கொள்ளப் போகின்ற சவால்கள், சுற்றுச்சூழலை பாதுகாப்பதன் முக்கியம், அழிவில் இருந்து சுற்றுச்சூழலை பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்கு கையளிப்பதன் அவசியத்தினை புரிந்து கொள்ள முடியும்.

சுற்றுச்சூழல் மனிதன் மீது செல்வாக்குச் செலுத்தும் ஒரு சக்தியாக நோக்கப்படுகின்றது. காரணம் சூழல் மனிதனின் சமூகம் சார் அம்சங்களில் மட்டுமன்றி, அவனுடைய தனிப்பட்ட பண்புகள் எனப்படும் எடை, உயரம், சருமத்தின் நிறம், தலைமுடியின் நிறம் போன்ற பல அம்சங்களில் செல்வாக்கு செலுத்துகின்றது. உதாரணமாக துருவப்பகுதியில் வாழ்பவர்கள் வெள்ளைநிற சருமத்தையும், அயனப்பகுதிகளில் வாழ்பவர்கள் கறுப்பு நிற சருமத்தினையும் கொண்டிருப்பதைக் கூறலாம். ஆனால் இவற்றை உணராத மனித சமூகம் நிற அடிப்படையில் பல முரண்பாடுகளை வளர்த்துக் கொண்டு அதனூடாக மோதல்களில் ஈடுபடுவதை இன்றும் அவதானிக்கலாம். சுற்றுச்சூழலின் செல்வாக்கினால் ஏற்படும் இத்தகைய தன்மைகளை மனிதன் விளங்கி, தம்மிடையே காணப்படும் தவறான புரிதலை நீக்கி அனைவரும் ஒற்றுமையாகவும், சந்தோசமாகவும் வாழ சுற்றுச்சூழல் பற்றிய அறிவும், தெளிவும் அவசியம்.

உலகிலுள்ள ஒவ்வொரு பிரதேசத்திலும் வாழும் மக்களின் செயற்பாடுகள் நிலம், நீர், வளி, மற்றும் ஒலி சார் என பல மாசடைவுகளையும், எதிர்பாராத விளைவுகளையும் ஏற்படுத்துகின்றது. அதனால் மனிதன் நோய்கள், வறுமை, வெறுப்பு, மன அழுத்தம், தனிமைப்படுத்தல் முதலான உடல், உள, சமூக மற்றும் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்படுகின்றான். ஆகவே இவை பற்றி அறிந்து மனிதன் தனது செயற்பாடுகள் ஒவ்வொன்றையும் சூழல் தாக்க மதிப்பீடு அடிப்படையில் மேற்கொண்டு சுற்றுச்சூழல் மாசடைவதைத் தடுப்பதற்குரிய விழிப்புணர்வினை சமூகத்தில் ஏற்படுத்தி, எதிர்கால எமது சந்ததியினருக்கு ஆரோக்கியமான சூழலை கையளிப்பதற்கு சுற்றுச்சூழல் பற்றிய அறிவும், தெளிவும் அவசியம்.

மனித இனம் கூட்டாக வாழும் இயல்புடையது. அதாவது மனிதன் தனது தேவைகளான பாதுகாப்பு பொருளாதார மேம்பாடு, கல்வி, சுகாதாரம் போன்றவற்றை விருத்தி செய்து கொள்ள குடும்பம், சமூதாயம், சமூகம் எனும் அடிப்படையில் இணைந்து வாழ்கின்றான். அதேபோல மனிதன் தன்னுடைய அடிப்படைத் தேவைகளான உணவு, உடை மற்றும் உறையுள் என்பவற்றை பெற்றுக்கொள்ள சூழலுடனும் நெருங்கிய தொடர்பினை வைத்துள்ளான். உதாரணமாக மரங்களின் துணையோடு வீடு மற்றும் தளபாடம் அமைத்தல், கிழங்குகள், பழங்கள் என்பவற்றை உண்ணுதல், செம்மறியாடுகள் மற்றும் பட்டுப்புச்சி என்பவற்றின் மூலம் பெறப்படும் பொருள்களைக்கொண்டு ஆடைகளை நெய்து அணிதல் என்பவற்றை குறிப்பிடலாம். இவ்வாறான இடைத்தொடர்புகள் மூலமும், நுகர்வுகள் மூலமும் ஏற்படும் தீய விளைவுகளை உணர்ந்து சூழல் மாசுபடுவதை தடுப்பதற்கு சுற்றுச்சூழல் பற்றிய அறிவும், தெளிவும் மனிதனுக்கு அவசியம்.



சுற்றுச்சூழல் மனிதனுடைய ஆளுமையை விருத்தி செய்வதற்குற்கும், மனிதனை சிறந்த ஆளுமையும், ஆற்றலுடையவனாக மாற்றுவதற்குமான முழுமையான பங்களிப்பினை வழங்கி வருகின்றது. அதுமட்டுமில்லாமல் சமூக நிலையமைப்பில் உள்ள மனநிலை சார்புகள், மனப்பாங்குகள் என்பனவும் சூழலின் செல்வாக்கினாலேயே ஏற்படுகின்றது. உதாரணமாக தொழிற்சாலைகள் அதிகம் நிறைந்த சூழலின் அருகில் வாழும் மனிதர்களுக்கு பல்வேறு நோய்த்தாக்கங்கள் ஏற்படுகின்றது. இதனால் மனச்சோர்வுகளுக்கு உள்ளாகின்றனர். மாசு நிறைந்த அந்த சூழலில் வாழும் சமூகத்தில் ஒவ்வொருவரினதும் ஆளுமை, ஆற்றல் பாதிக்கப்படுகின்றது. இத்தகைய தன்மைகளை மனித சமூகம் சரிவர விருத்தி செய்து மாசற்ற சூழலின் பங்களிப்பினை உணர்ந்து செயற்படுவதற்கு சுற்றுச்சூழல் பற்றிய அறிவும், தெளிவும் அவசியம்.

மனிதனின் செயற்பாட்டால் சூழல் எவ்வாறு பாதிக்கப்படுகின்றது என்பதையும், பௌதீகச் சூழல் காரணிகள் மனிதனை எவ்வாறு கட்டுப்படுத்துகின்றது என்பதனையும் விளங்கிக் கொள்ள வேண்டும். பௌதீகச் சூழல் மனிதனைக் கட்டுப்படுத்துவதற்கு யார் காரணமாக இருக்கிறான் என்பதை விளங்கிக் கொள்வது அவசியம். உதாரணமாக வீடு அமைப்பதற்கு, தளபாடம் அமைப்பதற்கு, விறகு, கைவினை சார்ந்த அழகு சாதனப் பொருள்களை உற்பத்தி செய்வதற்காக காடுகளை அழிக்கின்றான். காடுகளை அழிப்பதன் விளைவை கருத்தில் கொள்ளாமலே இவ்வாறான கொடிய செயற்பாட்டினை மேற்கொள்கிறான். காடுகளை அழிப்பதன் மூலம் சூழல் வெப்பமாக்கப்படுகின்றது. இதனால் மழைவீழ்ச்சியானது குறைவடைந்து நீர்ப்பஞ்சம் ஏற்பட்டு வரட்சி, கால்நடை உயிரினங்களின் அழிவு, வறுமை போன்ற பாதிப்புக்களை எதிர்காலத்தில் சந்திக்க வேண்டியுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளை தவிர்த்து, சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கு சுற்றுச்சூழல் பற்றிய அறிவும், தெளிவும் மனிதனுக்கு அவசியம்.

> சுற்றுச்சூழல் மனிதனுடைய ஆளுமையை விருத்தி செய்வதற்குற்கும், மனிதனை சிறந்த ஆளுமையும், ஆற்றலுடையவனாக மாற்றுவதற்குமான முழுமையான பங்களிப்பினை வழங்கி வருகின்றது. அதுமட்டுமில்லாமல் சமூக நிலையமைப்பில் உள்ள மனநிலை சார்புகள், மனப்பாங்குகள் என்பனவும் சூழலின் செல்வாக்கினாலேயே ஏற்படுகின்றது.

மனிதனுடைய செயற்பாடுகள் சூழலில் எதிர்பாராத விளைவுகளை ஏற்படுத்துகின்றது. மனிதன் தனது வாழ்வியலை மேம்படுத்தும் நோக்கில் மேற்கொள்கின்ற விவசாயம் மற்றும் கைத்தொழில் சார்ந்த பொருளாதார நடவடிக்கைகளுக்கு பல்வேறு தொழிநுட்பங்களை பயன்படுத்துகின்றான்.

உதாரண மாக இயந்திர சாதனங்களைப் பயன்படுத்தி கனிய வளங்களை அகழ்தல் என்பவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறான நடவடிக்கைகளால் சுனாமி, எரிமலை வெடிப்பு, வெள்ளம், வரட்சி, அமிலமழைப்பொழிவு முதலான அனர்த்தங்கள் உருவாகின்றன.

(08 ஆம் பக்கம் பார்க்க...)

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இராணுவ மயமாக்கலினால் சுதந்திர தேர்தலுக்கு ஆபத்து

## லால் விஜேநாயக்க எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 05

நாட்டில் இராணுவ மயமாக்கல் இடம்பெற்று வரும் நிலையில், நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் அதனூடாக மக்கள் அச்சுறுத்தப்படலாம் என்ற அச்சநிலை ஏற்படுவதற்கான சாத்தியம் இருப்பதாகச் சட்டநிபுணரும், ஜே.வி.பியின் தேசிய மக்கள் சக்தியின் கீழ் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுபவருமான சட்டத்தரணி லால் விஜேநாயக்க சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுத் தேர்தலின் பின்னர் இலங்கை மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சிறந்த அரசமைப்பு ஒன்றை அரசு உருவாக்க வேண்டும்.

இலங்கை சுங்கப் பணிப்பாளர், சுகாதார அமைச்சின் செயலாளர், பாதுகாப்புச் செயலாளர் உள்ளிட்ட பதவிகளுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவினால் இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

ஜனாதிபதியின் இந்த செயற்பாட்டை ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி, ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என எதிரணியினர் கடுமையாக விமர்சித்திருந்ததோடு இராணுவ மயமாக்கலுக்கான முதற்கட்ட நடவடிக்கை.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இராணுவமயமாக்கலின் ஊடாக மக்களின் வாக்குகளுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படலாம்.

எமது நாட்டில் சுயாதீன, நீதியான தேர்தல்களே அதிகமாக இடம்பெற்றிருக்கின்றன. பொதுமக்கள் கருத்துக் கணிப்பு ஒன்றும் மிக மோசமாக நடத்தப்பட்ட சந்தர்ப்பமும் உள்ளது. அவ்வாறு இந்தத் தேர்தலை நடத்த



முனைந்தால் நாடு மீள ஆபத்தையே சந்திக்கும்.

தற்சமயம் இராணுவ மயப்படுத்தல் இடம்பெற்று வருவதைப் பார்க்கின்றபோது மக்கள் மத்தியில் இப்படியான சந்தேகமும் எழுந்துள்ளது. அச்சுறுத்தி, பயத்தை ஏற்படுத்தி வாக்குகளை சூறையாடும் முயற்சி இடம்பெறலாம் என்ற அச்சம் ஏற்பட்டிருக்கின்றது – என்றார்.

## சிவசிதம்பரத்தின் உருவச் சிலைக்கு மலரஞ்சலி நாளை



யாழ்ப்பாணம், ஜூன் 5

தமிழர் விடுதலை கூட்டணியின் முன்னாள் தலைவரும் உடுப்பிட்டி, நல்லூர் தொகுதிகளின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.சிவசிதம்பரத்தின் 18ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு நாளை சனிக்கிழமை காலை 9 மணியளவில் வடமராட்சி கரவெட்டி. நெல்லியடி நகரில் அமைந்திருக்கும் அவரின் உருவச் சிலைக்கு மலரஞ்சலி. செலுத்தும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் உபாலி எஸ்.பொன்னம்பலத்தின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இந்த நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், கல்விமான்கள் பலரும் சமூக இடைவெளியைப் பின்பற்றிப் பொதுமக்களும் கலந்து கொள்வர்.

## சிமெந்து விலை ரூ. 150ஆல் அதிகரிக்கும்

கொழும்பு, ஜூன் 05

சிமெந்து மீதான செஸ் வரியை அதிகரிக்கும் அரசின் தீர்மானத்தால் சிமெந்து பை ஒன்றின் விலை 150 ரூபாவால் அதிகரிக்கக்கூடும் என்று பாவனையாளர் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

இதன் விளைவாக சிமெந்து விநியோகத்தில் ஏகபோகத்தை உருவாக்க வாய்ப்புள்ளது என்று பாவனையாளர் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்தார்.

நாட்டில் இறக்குமதி செய்யப்படும் சிமெந்து பவுடர் மற்றும் பொதியின் தரத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## மனிதனுக்கு...



(07 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இவை மனிதனுக்கு நீண்டகால மற்றும் குறுகிய கால பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது. சூழலில் காணப்படும் நிலம், நீர், வளி ஆகிய உயிரற்ற கூறுகள் மனித வாழ்க்கையினை தீர்மானிக்கும் காரணிகளாகும். இவை தமக்குரிய விகிதாசாரம் அல்லது அளவுகளில் சரியாக இருக்கும் போதுதான் மனித வாழ்வு நீடித்து நிலைக்கின்றது. மாறாக இவ் உயிரற்ற கூறுகளின் அளவு மாறுபடும் போது அது மனித வாழ்வை நிலைகுலைக்கின்றது. ஆகவே சுற்றுச்சூழலை பாதுகாத்து நோய்க்காரணிகளின் தொற்றுக்கு ஆளாகாமல், தன்வாழ்நாளை அதிகரித்து மகிழ்வாக வாழ சுற்றுச்சூழல் பற்றிய அறிவும், தெளிவும் மனிதனுக்கும் அவசியம்.

சுற்றுச்சூழல்சார்ந்த முகாமைத்துவ செயற்பாட்டை முன்னெடுப்பது மனிதனது மிக முக்கிய கடமையாகும், உதாரணமாக நீர்ப்பற்றாக்குறை மற்றும் உணவுப்பற்றாக்குறை எதிர்காலத்தில் ஏற்படலாம். ஆரம்ப காலத்தில் பயன்படுத்திய உணவிற்கும், தற்போது பயன்படுத்துகின்ற உணவிற்குமிடையே அதிக வேறுபாடு உண்டு. இவ்வாறு எதிர்காலத்தில் ஏற்படப்போகும் பற்றாக்குறைகளை கருத்தில் கொண்டு பல்வேறு ஆய்வுகளையும், அதற்கான தீர்வுகளையும் முன்வைத்து சுற்றுச்சூழல் சார்ந்த முகாமைத்துவ செயற்பாட்டை மேற்கொள்வதற்கு சுற்றுச்சூழல் பற்றிய அறிவும் தொளிவும் மனிதனுக்கு அவசியம்.

எனவே இதுமட்டுமன்றி காலநிலை மாற்றங்களை விளங்கிக் கொள்ளல், சூழல் மனிதனுக்கு ஏற்படுத்துகின்ற பிரச்சினைகளை இழிவளவாக்குதல், சமத்துவமின்மையானது எவ்வாறு ஜனநாயக மற்று சூழலை உருவாக்குகின்றது, பால்நிலை, இனம், பொருளாதாரம், அரசியல் போன்றன சூழல் செயற்பாட்டில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது, ஒரு சமூகத்தினுடைய பண்பாடு மற்றும் பழக்கவழக்கம் போன்வற்றை சுற்றுச்சூழல் எவ்வாறு தீர்மானிக்கின்றது, சனத்தொகை அதிகரிப்பில் சூழலின் பங்கு எத்தகையது, சுற்றுப்புறச் சூழல் சார்ந்த தாக்கம் மற்றும் மதிப்பீடுகளை ஆய்வு செய்து, பரிசீலனை செய்து கொள்ளல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு ஒவ்வொரு மனிதனுக்கும் சுற்றுச்சூழல் பற்றிய அறிவும், தெளிவும் மிக மிக அவசியமாகும். ஆகவே சூழலானது மனித சமூகத்தின் தேவைகள், ஆற்றல்கள், உளப்பாங்குகள் என்பவற்றோடு தொடர்புபடுவதனாலும், மனிதனின் செயற்பாட்டில் சூழலானது பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாவதன் விளைவினைப் பற்றி நன்கு அறிந்து சிறந்தவொரு எதிர்கால சமூகத்தினை உருவாக்குவதற்கு சுற்றுச்சூழல் பற்றிய அறிவும், தெளிவும் சமூகத்தில் வாழுகின்ற ஒவ்வொரு தனிமனிதனுக்கும் அவசியம்.

(கட்டுரையாளர் கிழக்குப் பல்கலைக்கழக சமூகவியல்துறை மாணவன்)

## நாமல் அதிருப்தி



கொழும்பு, ஜூன் 05

அமெரிக்கத் தூதரகத்தில் கடமையாற்றும் இராஜதந்திர அதிகாரி ஒருவர் வெளிநாட்டில் இருந்து இலங்கை திரும்பியபோது, கட்டுநாயக்க விமான நிலையத்தில் கொரோனா பரிசோதனையை நிராகரித்திருப்பது குறித்து அதிருப்தியடைவதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

வியன்னா இணக்கப்பாடுகளை விட தற்போது ஏற்பட்டுள்ள உலக தொற்று நோய் தொடர்பான கவனம் செலுத்தவேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன் இந்த தொற்று நோயில் இருந்து தப்பிக்க இலங்கை தேசிய ரீதியான உருவாக்கியுள்ள வேலைத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என நாமல் ராஜபக்ச தனது டுவிட்டர் பக்கத்தில் இட்டுள்ள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## ஒரே வாரத்தில் 3 இலங்கையர் தென்கொரியாவில் உயிரிழப்பு

தென்கொரியாவில் ஒரு வர காலத்துக்குள் பல்வேறு காரணங்களால் இலங்கை தொழிலாளர்கள் மூவர் உயிரிழந்துள்ளனர் என்று தென்கொரியாவில் உள்ள இலங்கை தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தமூன்றுஉயிரிழப்புகளும்கொலை, மதுபோதையில் உயரத்தில் இருந்து விழுந்தமை மற்றும் தாற்கொலை ஆகிய காரணங்களால் நடைபெற்றுள்ளன. இந்த இறப்புக்கள் தொடர்பான மேலதிக விசாரணைகள் தற்போது நடைபெற்ற வண்ணமுள்ளது.

உயிரிழந்தவர்களது உடல்களை இலங்கைக்கு கொண்டுவருவதற்கான தாமதங்களைக் குறைப்பதற்காக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் நடவடிக்கைகளை எடுத்துவருவதாகவும், இந்த மூவரும் தென்கொரிய வேலைவாய்ப்பு திட்ட விசாவின் மூலம் அங்கு சென்றவர் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதில் ஒருவர் தென்கொரியாவில் பிரபலமான இலங்கை இசைக்குழுவின் உறுப்பினராவார்.

பல கனவுகளுடன் தென்கொரியாவுக்குச் சென்ற இளைஞர்களின் இறப்பு அவர்களின் குடும்பங்களிற்க்கு பேரிழப்பாகும். தற்பொழுது சுமார் முப்பதாயிரத்துக்கும் மேட்பட்ட இலங்கையர்கள் தொழில் நிமித்தம் தென்கொரியாவில் உள்ளனர் எனத் தூதரக வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

# ஆன்மிக, ஒழுக்க ரீதியாக பண்பட்ட சமூகத்திலேயே நீதி சாத்தியமானது

## பொசன் வாழ்த்தில் ஜனாதிபதி தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 05

ஆன்மீகரீதியாகவும்ஒழுக்கரீதியாகவும் பண்பட்ட வளமானதொரு சமூகத்திலேயே அனைவருக்கும் நீதி சாத்தியமானது என்பது எனது நம்பிக்கையாகும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொசன் பௌர்ணமியினை முன்னிட்டு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இந்த விடயத்தினை அவர் குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

இலங்கை தேசத்திற்கு பௌத்த சமயத்தின் செய்தியைச் சுமந்து வந்த அரஹத் மகிந்த தேரரின் வருகையைநினைவுகூர்ந்துமிகுந்த பக்தியுடன் சமயக் கிரியைகளில் ஈடுபடுவது எமது நாட்டு மக்கள் பல்லாயிரம் வருடங்களாகப் பேணி வரும் வழக்கமாகும்.

தேரர் அவர்களின் வருகை இலங்கைத் தீவில் சமயம், கலாசாரம், சமூக மற்றும் அரசியல் ஆகிய அனைத்து துறைகளிலும் பண்பாட்டு ரீதியான மாற்றத்திற்கு அடித்தளமாக அமைந்தது.

இற்றைக்கு இரண்டாயிரம் வருடங்களுக்கும் முன்னர் மஹிந்த தேரருக்கும் அப்போதைய அரசராக இருந்த தேவ நம்பியதிஸ்ஸ மன்னருக்கும் இடையிலான சந்திப்பு இலங்கை வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்வாகும். எமது சமூக பெறுமானங்கள், பொருளாதாரம், இலக்கியம், கலைகள் மட்டுமன்றி கைவினை முறைமைகள்கூட புதிய பரிமாணத்தை பெற்றது.

வானளாவ உயர்ந்த தாகபைகள், பெரும் சமுத்திரங்களை ஒத்த குளங்கள், நாட்டை தன்னிறைவடையச் செய்த விவசாய கலாசாரம், உலகமே வியக்கும் கலைப் படைப்புகள், இவற்றுக்கெல்லாம் மேலாக புத்த பெருமானின் அட்டாங்க மார்க்கம் என்ற எண்வகை நெறிகளால் போசிக்கப்பட்ட, நீர், நிலம், தாவரங்கள், சூழல் உட்பட அனைத்து உயிரினங்களுக்கும் நீதி செலுத்தும், மிதவாத வாழ்க்கை முறையை கொண்ட, இலங்கை பௌத்தர்கள் உருவானதும் இந்த சமூக, கலாசார புரட்சியின் மூலமாகவேயாகும்.

மஹிந்த தேரர் போதித்த சமய மற்றும் வாழ்க்கை நெறியின் அடிப்படையிலேயே நாம் ஒரு கீர்த்திமிக்க தேசமாக முன்னோக்கிப் பயணித்திருக்கின்றோம். ஈருலகினதும் நன்மைக்காக சமய நன்நெறிகளின் அடிப்படையிலான ஒழுக்கப் பண்பாடான சமூகமொன்றை உருவாக்குவதற்கும் அது அடித்தளமாக அமைந்தது.

வரலாற்றிலிருந்து பெற்ற அனுபவங்கள் மற்றும் பௌத்த சமயத்தின் மூலம் கிடைத்த செல்வாக்கிற்கு அமைவாகவே நாம் ஒரு சுபீட்சமான தேசத்தை நோக்கி நாட்டை வழிநடத்துகின்றோம்.

ஆன்மீக ரீதியாகவும் ஒழுக்க ரீதியாகவும் பண்பட்ட வளமானதொரு சமூகத்திலேயே அனைவருக்கும் நீதி சாத்தியமானது என்பது எனது நம்பிக்கையாகும். இந்த அடிப்படையிலிருந்தே எனது அரசு நிகழ்காலத்திற்கு மட்டுமன்றி எதிர்காலத்திற்குமான திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது என்பதைக் குறிப்பிடவேண்டும்.

நாடு தற்போது முகம்கொடுத்துள்ள நோய்த்தொற்றுக்கு மத்தியிலும்கூட நாம் பண்பாட்டின் அடிப்படையிலான அந்தத் தத்துவத்திலிருந்து விலகிடவில்லை. மேற்குறித்த அடிப்படையில்லாத ஒரு பயணம் இலங்கையர்களான எமக்கு இல்லை – என்று தெரிவித்துள்ளார்.

# கல்முனையில் திருட்டு சந்தேகநபர்கள் கைது

கல்முனை பிராந்தியத்தில் ஆலயஉண்டியல்கள் ஒலிபெருக்கி திருட்டு மற்றும் துவிச்சக்கர வண்டி திருட்டில் ஈடுபட்டவர்கள் என்ற சந்தேகத்தில் இருவர் கைதாகி உள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்ட சாய்ந்தமருது பகுதியில் சாவு வீடொன்றில் துவிச்சக்கரவண்டி ஒன்று களவாடப்பட்டுள்ளதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடுத்து அதே பகுதியைச் சேர்ந்த 43 வயதான போதைப்பொருளுக்கு அடிமையான சந்தேகநபர் கைதானார்.

இவ்வாறு வெள்ளிக்கிழமை முற்பகல் கைதான சந்தேக நபர் ஏலவே மற்றுமொரு சம்பவத்தில் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டவர் எனவும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கல்முனை பொலிஸ்நிலையத்திற்குஅழைத்து வரப்பட்டபோது தப்பி செல்ல முயன்ற நிலையில் தற்போது மற்றுமொரு துவிச்சக்கர வண்டி திருட்டிற்காக கைதாகியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் கல்முனை பிராந்தியத்தில் உள்ள ஆலயங்களில் உண்டியல் திருட்டு மற்றும் ஒலிபெருக்கி சாதனங்கள் களவாடப்பட்டுள்ளதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கமைய கொக்கட்டிச்சோலை பகுதியை சேர்ந்த 19 வயதான இளைஞனைச் சந்தேகத்தில் கைது செய்தது.

# கஞ்சாச் செடியுடன் ஒருவர் கிளிநொச்சியில் கைதானார்



கிளிநொச்சி, ஜூன் 05

கிளிநொச்சி – ஆனந்தபுரம் பகுதியில் வளர்க்கப்பட்ட சுமார் 4.5 அடி உயரம் கொண்ட 9 கஞ்சாச் செடிகள் கிளிநொச் சிப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து நேற்று முன்னெடுத்த சுற்றிவளைப்பின் போதே கஞ்சாச் செடிகள் கைப்பற்றப்பட்டன.

இந்தக் செடிகளை வளர்த்த வரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

## ஊரடங்கு உத்தரவை மீறிய 13 பேர் மலையத்தில் கைது

நாட்டில் நேற்றும் இன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த ஊரடங்கு உத்தரவின்போது உரிய ஆவணங்களோ, சரியான காரணங்களோ இன்றி மலையகத்தில் நடமாடித் திரிந்த 13 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹட்டன் பொலிஸாரினால் எட்டு பேரும், நோர்வூட் பொலிஸாரால் 4 பேரும் கினிகத்தேனை பொலிஸாரால் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நபர்கள் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் இவர்களை ஹட்டன் நீதிவான் முன்னால் நிறுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# சிறுமியுடன் குடும்பம் நடத்திய இளைஞன் ஆலையடியில் கைது

## ஒத்துழைத்த சிறுமியின் தகப்பனும் இளைஞனின் தாயும் கூடக் கைது

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆலையடி வேம்பு கண்ணகிபுரம் பிரதேசத்தில் திருமண வயதை எட்டாத சிறுமியுடன் குடும்பம் நடத்திய குற்றச்சாட்டில் 19 வயது இளைஞனும் அவர்களுக்கு உதவி குற்றச்சாட்டில் சிறுமியின் தந்தையும், இளைஞனின் தாயும் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.

சந்தேக நபர்கள் மூவரையும் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதவான் மன்ற பதில் நீதவான் எஸ்.எல்.ஏ.றஸீட் உத்தரவிட்டார்.

வேறொரு வழக்கு விசாரணைக்காகச் சிறுமியைத் தேடிச்சென்ற பொலிஸார் அவர் இளைஞர் ஒருவருடன் குடும்பம் நடத்தியவர் என்று தெரிய வந்ததை அடுத்து சிறுமியை வன்புணர்வுக் குற்றச்சாட்டின் கீழ் இளைஞனையும் அவனுக்கு உதவிய குற்றச்சாட்டில் மற்றைய இருவரையும் கைது செய்தனர்.

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆலையடிவேம்பு கண்ணகிபுரம் பிரதேசத்தை சேர்ந்த 14 வயது சிறுமியை அதே பிரதேசத்தை சேர்ந்த 19 வயது இளைஞன் ஒருவரைக் காதலித்து வந்தார்.

அந்த இளைஞர் சிறுமியுடன் நெருங்கி பழகுவதை அறிந்த சிறுமியின் அப்பாவும் இளைஞனின் அம்மாவும் இருவரையும் பதிவுத் திருமணம் செய்யாமல் குடும்பமாக வாழ அனுமதித்துள்ளனர்.

பதிவு திருமணம் செய்ய சிறுமிக்கு வயது போதாது என்பது பெற்றார்களுக்கு பின்பு தெரிய வந்ததையடுத்து சிறுமியை பிரித்து சிறுமியின் தகப்பன் அவரது சகோதரி வசிக்கும் பாலமுனை பிரதேசத்தில் தங்க வைத்துள்ளார்.

சிறுமி பாலமுனை திராய்கேணி பிரதேசத்தில் வசித்து வரும் போது அப்பிரதேச பெண் ஒருவரால் சிறுமிக்கு எதிராக அக்கரைப்பற்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனை விசாரிக்க சென்ற பொலிசாருக்கு சிறுமி இளைஞன் ஒருவனுடன் வாழ்ந்த கதை தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து சிறுமியை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் அக்கரைப்பற்று பொலிசார் இளைஞனைக் கைது செய்தனர். இச்சம்பவத்துக்கு உதவிய குற்றச்சாட்டில் இளைஞனின் அம்மாவையும், சிறுமியின் அப்பாவையும் கைது செய்து விசாரணையின் பின் மூவரையும் மன்றில் ஆஜர் படுத்தினர்.

பாதிக்கப்பட்ட சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.06.2020 இல் வெளியிடப்பெற்றது.